**இந்திய உச்ச நீதிமன்றம்**

**உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு**

**உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 4536-4537/2019**

**(சிறப்பு அனுமதி மனு (உ) எண்கள் 31125-26/2013-லிருந்து எழுகின்றன)**

எஸ். சுப்ரமணியன் ...மேல்முறையீட்டாளர்

-எதிர்-

எஸ். இராமசாமி மற்றும் பலர் ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

**<u>தீர்ப்புரை</u>**

**<u>மாண்புமிகு நீதியரசர் திரு. எம்.ஆர். ஷா:</u>**

இரு சிறப்பனுமதி மனுக்களிலும் அனுமதி வழங்கப்பட்டது.

2. இவ்விரு மேல்முறையீடுகளிலும் பொதுவான சட்டவினாவும் மற்றும் பொதுவான பொருண்மைகள் எழுவதாலும் மற்றும் அவ்வாறே உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பு மற்றும் உத்தரவினின்று எழுவதாலும், இவ்விரு மேல்முறையீடுகளும் பொதுவான தீர்ப்பு மற்றும் உத்தரவின் மூலம் இந்நீதிமன்றத்தினால் முடிக்கப்படுகின்றன.

3. விசாரணை நீதிமன்றத்தினாலும் மற்றும் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தினாலும் தள்ளுபடி செய்யப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை நீக்கறவு செய்தும், இரண்டாம் மேல்முறையீடு எண்கள் 4 மற்றும் 5/2009- ஐ அனுமதித்தும், அதன் மூலம் வழக்காளருக்காதரவாக தீர்ப்பாணை வழங்கியும், சென்னை உயர் நீதிமன்றத்தினால் அளிக்கப்பட்ட பொதுவான தீர்ப்பு மற்றும் உத்தரவால் பாதிப்படைந்தும் மற்றும் அதிருப்தியுற்றும் இங்குள்ள ஆதியில் மறுப்பாளரான இம்மேல்முறையீட்டாளர் தற்பொழுதைய மேல்முறையீடுகளைத் தாக்கல் செய்துள்ளார்.

4. இம்மேல்முறையீடுகளுக்கு வழிகோலிய பொருண்மைகளின் சுருக்கம் பின்வருமாறு:

வழக்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துகள் தொடர்பாக நீதிமன்றத்தினால் இறுதியாக வழக்காளருக்கும் மற்றும் 2-ஆம் மறுப்பாளருக்கும் இடையில் பாகப்பிரிவினை செய்து, நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்படும் வரையில், வழக்குச் சொத்துகளில் வழக்காளருக்கு உரிமையான 1/3 பங்கு தொடர்பாக கிரையமோ அல்லது வில்லங்கமோ அல்லது வேறு யாதொரு ஆவணமோ, 2-ஆம் மறுப்பாளரால் நிறைவேற்றப்படுவதினின்று, அவரைத் தடுக்கும் உறுத்துக்கட்டளை கோரி, வழக்காளரும், இங்குள்ள 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருமான எஸ். இராமசாமி, மு.வ. எண் 10/2006- ஐ தன்னுடைய தந்தையார் செங்கோட கவுண்டர் (இறந்துவிட்டார்) மற்றும் இளைய சகோதரர் எஸ். சுப்ரமணியன் ஆகியோருக்கெதிராக தாக்கல் செய்தார். அதேநேரத்தில், அதே வழக்காளரான இராமசாமி வழக்குச் சொத்துகளில் பாகப்பிரிவினை கோரி, தன்னுடைய தந்தையார் மற்றும் இளைய சகோதரர் ஆகியோருக்கெதிராக மு.வ. எண் 19/2005- ஐ தாக்கல் செய்திருந்தார்.வழக்காளர் இராமசாமியின் தரப்பின் வழக்கு யாதெனில், வழக்காளர், அவருடைய தந்தையார் மற்றும் இளைய சகோதரர் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு இந்து கூட்டுக் குடும்பமானது, மூதாதையர் சொத்துகளை கொண்டிருந்தது என்பதாகும்.மேலும், வழக்குச் சொத்தான வா.த.சா.ஆ .1 குமாரசாமி கவுண்டர் என்பவரால் தன்னுடைய தந்தையார் இராமசாமிக்காதரவாக நிறைவேற்றப்பட்ட, 07.04.1956-ஆம் தேதியிடப்பட்ட தீர்வு ஆவணத்தின் மூலம் கிடைத்து, அன்று முதல் மூதாதையர் சொத்துகளோடு சேர்த்து, மூவராலும் இந்து கூட்டுக் குடும்பத்தினராக கூட்டாக அனுபவிக்கப்பட்டு வந்தது என்பதாகும். வழக்காளரின் தந்தையாரும் மற்றும் இளைய சகோதரரும் பரஸ்பரம் இணைந்து, வழக்குச் சொத்துகளை விற்றுவிட கூட்டாக முயன்று வருகின்றனர் என்பதும், அதனால், உறுத்துக்கட்டளைக்கான முதல் வழக்கான மு.வ. எண் 19/2005 தாக்கல் செய்யப்பட்டது என்பதும், மேலும் வழக்காளரின் வழக்காகும்.

4.1.இவ்வழக்கானது, வழக்காளரின் இளைய சகோதரரான 2-ஆம் மறுப்பாளரால் எதிர்க்கப்பட்டது. செங்கோட கவுண்டர் மற்றும் அவருடைய மகன்களான இராமசாமி மற்றும் சுப்ரமணியன் ஆகியோருக்கிடையே எந்நாளும் கூட்டுக் குடும்பம் இருந்ததில்லை. வா.த.சா.ஆ .1 சொத்தான வழக்குச் சொத்தானது, செங்கோட கவுண்டரால் 1956-ஆம் ஆண்டில் தீர்வாவணத்தின் மூலம் பெறப்பட்டது. அது, அவருடைய சுயசம்பாத்திய சொத்தாகிறது. செங்கோட கவுண்டரின் சொத்துகளில் அவருடைய மகன்களான இராமசாமி மற்றும் சுப்ரமணியன் ஆகியோர் எந்தவித உரிமையும் பெற்றிருக்கவில்லை. அச்சொத்துகள் எந்நிலையிலும் கூட்டுக் குடும்பச் சொத்துகளாக அனுபவிக்கப்படவில்லை என்பது 2-ஆம் மறுப்பாளர் தரப்பு வழக்காகும். 2-ஆம் மறுப்பாளர் தரப்பின் குறிப்பான வழக்கு யாதெனில், உண்மையில் செங்கோட கவுண்டர் தன் வாழ்நாளின்பொழுது சுப்ரமணியனுக்காதரவாக வா.த.சா.ஆ .13 மற்றும் வா.த.சா.ஆ.14 ஆகிய தீர்வாவணங்களையும், பின்னர் 08.11.2004-ஆம் தேதியிடப்பட்ட ம.த.சா.ஆ.24 ஆவணமான உயிலாவணத்தையும், சுப்ரமணியனுக்காதரவாக நிறைவேற்றினார். அது அவ்வாறிருக்க, சுப்ரமணியன் வழக்குச் சொத்துகளின் முழுமையான உரிமையாளராகிறார் என்பதாகும். இரண்டாம் வழக்குங்கூட உ.வி.மு.ச., ஆணை 2, விதி 2-ஆல் தடைசெய்யப்படுகிறது என்றுங்கூட 2-ஆம் மறுப்பாளர் தரப்பில் வாதிடப்பட்டது. முதல் வழக்கான உறுத்துக்கட்டளைக்கான வழக்கைத் தாக்கல் செய்யும் முன்னர் வழக்காளர் பாகப்பிரிவினைக்கோரி அறிவிப்பு அனுப்பினார். இருந்தபொழுதிலும், எக்காரணமுமின்றியும் உறுத்துக்கட்டளைக்கான வழக்கைத் தாக்கல் செய்தபொழுதே, பின்னர் பாகப்பிரிவினை வழக்கைத் தாக்கல் செய்வதற்கான அனுமதியை நீதிமன்றத்தில் பெறாமலும், அவர் உறுத்துக்கட்டளைக்கான வழக்கு மட்டுமே தாக்கல் செய்துவிட்டு, பின்னர் பின்னர் அவராக பாகப்பிரிவினைக்கான வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். அது, உரிமையியல் விசாரணைமுறைச் சட்டத்தின் ஆணை 2, விதி 2-இன் கீழ் தடை செய்யப்படுகிறது என்பதுங்கூட மறுப்பாளர் தரப்பின் வழக்காகும்.

4.2.விசாரணை நீதிமன்றமானது, வழக்கெழும் வினாக்களை வனைந்து, இரு வழக்குகளையும் கூட்டாக விசாரித்தது, வழக்காளர் இராமசாமி தன்னை வா.த.சா.1-ஆக விசாரித்துக்கொண்டு, வா.த.சா.2 முதல் 4 வரையிலானவர்களை விசாரித்து, வா.த.சா.ஆ.1 முதல் வா.த.சா.ஆ .46 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்து கோப்பிற்கு கொண்டு வந்தார். மறுப்பாளர் சுப்ரமணியன் தன்னை ம.த.சா.1-ஆக விசாரித்துக்கொண்டு, ம.த.சா.2 முதல் 4 வரையிலானவர்களையும் விசாரித்து, ம.த.சா.ஆ.1 முதல் ம.த.சா.ஆ.31 வரையிலான ஆவணங்களைக் குறியீடு செய்து, கோப்பிற்கு கொண்டுவந்தார். அதன்பின்னர், அறிவார்ந்த விசாரணை நீதிமன்றமானது, சான்றுகளை ஆராய்ந்து, இரு வழக்குகளையும் தள்ளுபடி செய்தது.தோல்வியுற்ற வழக்காளரால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடுகள் அறிவார்ந்த முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டன.

4.3.விசாரணை நீதிமன்றத்தினால் வழக்குகளை தள்ளுபடி செய்து வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை உறுதிசெய்தும், மேல்முறையீடுகளை தள்ளுபடி செய்தும், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட பொதுவான தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையால் அசல் வழக்காளர் பாதிப்படைந்ததாக உணர்ந்தும் மற்றும் அவற்றால் அதிருப்தியுற்றும், உயர் நீதிமன்றத்தின் முன்பாக இரு மேல்முறையீடுகளைத் தாக்கல் செய்தார். உயர் நீதிமன்றமானது, பின்வரும் சட்ட வினாக்களை முதன்மையான சட்ட வினாக்களாக வனைந்தது:

> "(1) செங்கோட கவுண்டரால் இரக்கம் காட்டப்பட்டதை வழக்குச் சொத்துகள் மூதாதையர் சொத்துகளுடன் சேர்த்து அனுபவிக்கப்பட்டதாக கொள்ளமுடியாது என முடிவு செய்ததில் இரு கீழமை நீதிமன்றங்களும் நியாயப்படுத்தப்படுகின்றனவா? வா.த.சா.ஆ.1,19, 24, 45 மற்றும் வா.த.சா.ஆ.46 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட சொத்துகளை "பிதுராஜித" (மூதாதையர்) சொத்துகளாக கருத கீழமை நீதிமன்றங்கள் தவறியது நியாயப்படுத்தப்படுகின்றனவா? மற்றும் வழக்குச் சொத்துகளை

கூட்டுக் குடும்பச் சொத்துகளுடன் சேர்க்கப்படாததாகவும் அல்லது கூட்டுக் குடும்பச் சொத்துகளாகப் பாவிக்கப்பட்டதாகவும் இவ்வழக்கை முடிவு செய்ததில் கீழமை நீதிமன்றங்கள் நியாயப்படுத்தப்படுகின்றனவா?

(2) வா.த.சா.ஆ.13, 14 ஆகிய தீர்வாவணங்களும் மற்றும் ம.த.சா.24-ஆன ஆவணமும், சட்டப்படி நிரூபிக்கப்படவில்லை என வழக்காளர் குற்றஞ்சாட்டியபொழுதிலும், அவற்றை உறுதி செய்த கீழமை நீதிமன்றங்கள் நியாயப்படுத்தப்படுகின்றனவா?

(3) வழக்கானது, உ.வி.மு.ச., ஆணை2, விதி 2-ஆல் தடைசெய்யப்படுகிறது என்னும் வாதமானது மறுப்பாளரால் பதிலுறையில் வைக்கப்பட்டபொழுதிலும், அதனை குறிப்பிடாமல், கீழமை நீதிமன்றங்கள் வழக்கை முடிவு செய்து நியாயப்படுத்தப்படுகிறதா?

(4) இரு கீழமை நீதிமன்றங்களின் தீர்ப்புகளிலும் ஏதேனும் முறைகேடு அல்லது சட்டவிரோதம் இருக்கிறதா?"

அதன்பின்னர், கோப்பிலுள்ள அனைத்து ஆவணங்களையும் மறு ஆய்வு செய்தபின்னர், உயர் நீதிமன்றமானது, தீர்ப்பிற்குள்ளான தீர்ப்பு மற்றும் உத்தரவின் மூலம், மேற்படி சட்ட வினாக்கள்/முதன்மை சட்ட வினாக்களுக்கு கீழ்க்காணுமாறு பதிலளித்துள்ளது:

"முதன்மை சட்ட வினா (1) செங்கோட கவுண்டரால் காட்டப்பட்ட இரக்கமானது, வழக்குச் சொத்துகளை பிதுராஜித சொத்துகளுடன் சேர்த்து அனுபவித்ததாக கருதமுடியாது என இரு கீழமை நீதிமன்றங்கள் முடிவு செய்ததையும் மற்றும் வா.த.சா.ஆ .1-இல் அட்டவணையிடப்பட்ட வழக்குச் சொத்துகளை "பிதுராஜித சொத்துகளாக" (மூதாதையர்) சொத்துகளாக கருதாததையும் மற்றும் வா.த.சா.ஆ.19, 24, 45 மற்றும் 46 ஆகியவற்றை மூதாதையர் சொத்துகளுடன் சேர்த்து கூட்டுக் குடும்பச் சொத்துகளாக அனுபவித்த பொழுதிலும், அவை கூட்டுக் குடும்பச் சொத்துகளல்ல என

தீர்ப்பளித்ததில், இரு கீழமை நீதிமன்றங்களும் நியாயப்படுத்தப்படவில்லை என்கின்றவாறு 1-ஆம் வினாவானது பதிலளிக்கப்படுகிறது.

முதன்மை சட்ட வினா (2) -ஆனது, வா.த.சா.ஆ .13 மற்றும் 14 ஆகிய தீர்வாவணங்கள் மற்றும் மற்றும் ம.த.சா.ஆ.24--ஆன உயிலாவணம் ஆகியவற்றை செங்கோட கவுண்டர் நிறைவேற்றியதை உறுதி செய்ததில், இரு கீழமை நீதிமன்றங்களும் நியாயப்படுத்தப்பட்டன. எனினும், என்னுடைய மேற்படி விவாதத்தின் அடிப்படையில், செங்கோட கவுண்டர் வழக்குச் சொத்து மொத்தத்தையும் தன்னுடைய சுய சம்பாத்திய சொத்தாகக் கருதி, அவை மொத்தத்திற்கும் தீர்வாவணங்களை நிறைவேற்ற அருகதையுடையவரல்ல. ஆனால், வழக்குச் சொத்தின் 1/3 பங்கிற்கு மட்டுமே அவர் தன்னுடைய மகன்களுக்கு யாதொரு ஆவணமும் நிறைவேற்ற அருகதையுடையவராவார். எனவே, வழக்குச் சொத்தானது 2 பங்குகளாக பிரிக்கப்படவேண்டும். வழக்குச் சொத்தில் வழக்காளரும் மற்றும் மறுப்பாளரும் தலா பாதி, அதாவது, ½ பங்கைப் பெற அருகதையுடையவராவர் என முடிவெடுக்கப்படுகிறது.

முதன்மை சட்ட வினா (3)-ஐ பொருத்தவரையில், கீழமை நீதிமன்றங்கள் உ.வி.மு.ச., ஆணை 2, விதி 2- ஐ கருத்திற்கொள்ளாமல் தீர்ப்பளித்தது நியாயப்படுத்தப்படுகிறது. என்னுடைய மேற்படி விவாதத்தின் அடிப்படையில் பாகப்பிரிவினைகோரும் செயலானது, ஒரு தொடர் நிகழ்ச்சியாகும். "

அதன்விளைவாக, உயர் நீதிமன்றமானது, மேல்முறையீடுகளை அனுமதித்து, விசாரணை நீதிமன்றம் மற்றும் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றின் பொதுவான தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை நீக்கறவு செய்ததோடு, வழக்காளர் மற்றும் மறுப்பாளர் ஆகியோருக்கு தலா பாதி, அதாவது, ½ பங்கை வழக்குச் சொத்தில் ஒதுக்கி, முதல்நிலை தீர்ப்பாணையை வழங்குமாறு பணித்தது.

4.4. உயர் நீதிமன்றமானது, உ.வி.மு.ச., பிரிவு 100-இன் கீழ் தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, கோப்பிலுள்ள அனைத்துச் சான்றுகளையும் மறு ஆய்வு செய்து, கீழமை நீதிமன்றங்களின் அறிந்தமைகளை (முடிவுகளை) நீக்கறவு செய்து வழங்கிய எதிர்ப்பிற்குள்ளான தீர்ப்பு மற்றும் உத்தரவினால் பாதிப்படைந்ததாக உணர்ந்தும் மற்றும் அவற்றால் அதிருப்தியுற்றும், ஆதி மறுப்பாளரானவர் தற்பொழுதைய மேல்முறையீடுகளைத் தாக்கல் செய்துள்ளார்.

5. மேல்முறையீட்டாளர்-ஆதியில் மறுப்பாளருக்காக, கற்றறிந்த வழக்குரைஞர் திரு. சித்தார்த் நாயுடு முன்னிலையாகியுள்ளார் மற்றும் 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்-ஆதியில் வழக்காளருக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு. வி. பிரபாகர் முன்னிலையாகியுள்ளார்.

6. மேல்முறையீட்டாளர்/ஆதியில் மறுப்பாளருக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. சித்தார்த் நாயுடு தீவிரமாக வாதிட்டதாவது, வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளில், உயர் நீதிமன்றமானது, மேல்முறையீடுகளை அனுமதித்து, கீழமை நீதிமன்றங்களின் தீர்ப்புகளில் குறுக்கிட்டதன் மூலம் பெரும் தவறிழைத்துவிட்டது என்பதாகும்.

6.1.மேல்முறையீட்டாளர்/ஆதியில் மறுப்பாளரானவர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. சித்தார்த் நாயுடு தீவிரமாக வாதிட்டதாவது, உயர் நீதிமன்றமானது, உ.வி.மு.ச., பிரிவு 100-ஐ பயன்படுத்தி எதிர்ப்பிற்குள்ளான தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வழங்குகையில், தன்னுடைய சட்ட வரம்பை மீறியுள்ளது என்பதாகும்.

6.2. மேல்முறையீட்டாளர்/ஆதியில் மறுப்பாளரானவர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. சித்தார்த் நாயுடு தீவிரமாக வாதிட்டதாவது, இந்நீதிமன்றத்தினால் தொடர்ந்து வழங்கப்பட்டுள்ள தீர்ப்புகளின்படியும் மற்றும் உ.வி.மு.ச., பிரிவு 100-இன்படியும், உ.வி.மு.ச., பிரிவு 100-இன் கீழ் அதிகாரத்தைப் பயன்படுத்துகையில், முதல்

மேல்முறையீட்டில் கோப்பிலுள்ள அனைத்து சான்றுகளையும் மறு ஆய்வு செய்வதுபோன்று, உயர் நீதிமன்றமானது செயல்படக்கூடாது.

6.3. மேல்முறையீட்டாளர்/ஆதியில் மறுப்பாளரானவர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. சித்தார்த் நாயுடு தீவிரமாக மேலும் வாதிட்டதாவது, உயர் நீதிமன்றத்தினால் வனையப்பட்டுள்ள முதன்மை சட்ட வினாக்கள், முதன்மை சட்ட வினாக்களாகவே கூறப்படமுடியாது என்பதாகும். உ.வி.மு.ச., பிரிவு 100 முதன்மை சட்ட வினாக்கள் மீதான இரண்டாம் மேல்முறையீட்டிற்கே வகைசெய்கிறது என வாதிடப்பட்டது. இரண்டாம் மேல்முறையீடுங்கூட முதன்மை சட்ட வினாக்கள் மீது மட்டுமே ஏற்கப்படக்கூடாது என வாதிடப்படுகிறது.சட்ட வினாவானது முதன்மை சட்ட வினாவாக இருக்கவேண்டுமேயன்றி, வெறும் சட்ட வினாவாக இருக்கக்கூடாது எனவும் வாதிடப்படுகிறது. உயர் நீதிமன்றமானது, இரண்டாம் மேல்முறையீட்டில் தீர்ப்பளிக்கையில், அந்நீதிமன்றத்தினால் வனையப்படும் முதன்மை சட்ட வினாக்களை. முதன்மை சட்ட வினாக்களாகவே கூறப்படமுடியாது எனவும் வாதிடப்படுகிறது. உயர் நீதிமன்றத்தினால் வனையப்பட்ட முதன்மை சட்ட வினாக்களுங்கூட, பொருண்மைகளின் வினாக்களாகும் என வாதிடப்படுகிறது. எனவே, உயர் நீதிமன்றமானது இரண்டாம் மேல்முறையீடுகளை அனுமதித்ததன் மூலம் கடும் பிழை இழைத்துவிட்டது என வாதிடப்படுகிறது.

6.4.மேல்முறையீட்டாளர்/ஆதியில் மறுப்பாளரானவர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. சித்தார்த் நாயுடு தீவிரமாக மேலும் வாதிட்டதாவது, மற்றபடியுங்கூட உயர் நீதிமன்றமானது, உ.வி.மு.ச., பிரிவு 100-இன் கீழ் தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்துகையில், கோப்பிலுள்ள அனைத்து சான்றுகளையும் மறு ஆய்வு செய்துள்ளது. அது, முற்றிலும் அனுமதிக்கத்தக்கதல்ல மற்றும் உயர் நீதிமன்றமானது உ.வி.மு.ச., பிரிவு 100-இன் கீழான அதிகாரத்தை பயன்படுத்துகையில் வழங்கிய தீர்ப்பு மற்றும் உத்தரவு ஆகியவை நிலைக்கத்தக்கதல்ல என்பதாகும்.பொருண்மையின் வினாவைப் பொருத்தவரையில் முதல்

மேல்முறையீட்டு நீதிமன்றமே பொருண்மைகளை ஆய்வு செய்வதற்கான இறுதி நீதிமன்றமாகும் என வாதிடப்படுகிறது. கோப்பிலுள்ள சான்றுகளுக்கு தீர்ப்பானது முறைகேடாகவோ அல்லது முரணாகவோ இருந்தாலன்றி கீழமை நீதிமன்றங்களினால் பதியப்பட்ட அறிந்தமைகளில் (முடிவுகளில்) மேலும் குறிப்பாக, முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் முடிவில் குறுக்கிட்டு, அவற்றை தலைகீழாக்குவதில் உயர் நீதிமன்றமானது நியாயப்படுத்தப்படமுடியாது என வாதிடப்படுகிறது. தற்பொழுதைய வழக்கில் உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள ஒட்டுமொத்த தீர்ப்பு மற்றும் உத்தரவை நாம் பார்ப்போமானால், உயர் நீதிமன்றமானது, கோப்பிலுள்ள அனைத்துச் சான்றுகளையும் மறு ஆய்வு செய்து, தன்னுடைய சொந்த முடிவையும், அறிந்தமைகளையும் அளித்து, பின்னர் இரு கீழமை நீதிமன்றங்களினாலும் கோப்பில் பதியப்பட்டுள்ள அறிந்தமைகளில் குறுக்கிட்டுள்ளது. அது, அவை சான்றுகளை ஆய்ந்தமையின் விளைவாகும். அது, முற்றிலும் அனுமதிக்கத்தக்கதல்ல எனவும் வாதிடப்படுகிறது. 10தன்னுடைய மேற்படி வாதங்கள் மற்றும் உயர் நீதிமன்றமானது, உ.வி.மு.ச., பிரிவு 100-இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டை முடிவு செய்கையில் தன் சட்டவரம்பு ஆகியவற்றிற்கு **ஆதரவாக பஞ்சுகோபால் பருவா -எதிர்- உமேஷ் சந்த்ரா கோஸ்வாமி, (1997) 4 எஸ்.சி.சி. 713; கோந்திபா தகடு கடம்-எதிர்- சாவித்ரிபாய் சோபன் குஜார், (1999) 3 எஸ்.சி.சி. 722; ஈஸ்வர் தாஸ் ஜெயின் - எதிர்- சோஉறன் லால், (2000) 1 எஸ்.சி.சி. 434** ஆகிய வழக்குகளில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புகளை மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையாகும் கற்றறிந்த வழக்குரைஞர் பெரிதும் சார்ந்துநின்றார்.

6.5.மேல்முறையீட்டாளர்/ஆதியில் மறுப்பாளரானவர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. சித்தார்த் நாயுடு மேலும் வாதிட்டதாவது, மற்றபடியுங்கூட வழக்குச் சொத்துகள் மூதாதையர் சொத்துகளுடன் சேர்த்து அனுபவிக்கப்பட்டது என உயர் நீதிமன்றம் கூறும் பிற காரணங்களும் நிலைக்கத்தக்கதல்ல என்பதாகும்.

6.6. மேல்முறையீட்டாளர்/ஆதியில் மறுப்பாளரானவர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. சித்தார்த் நாயுடு தீவிரமாக

மேலும் வாதிட்டதாவது, ஒப்புக்கொண்டவகையில் உயர் நீதிமன்றத்தின் கூற்றின்படியுங்கூட வழக்குச் சொத்துகள் செங்கோட கவுண்டரின் சுய சம்பாத்திய சொத்துகளாகும்.காரணம். அது அவருடைய ஆண் மூதாதையரிடமிருந்து நேரடியாக பெறப்பட்ட சொத்துகளல்ல. அவருடைய தாயாரின் சகோதரியின் கணவரிடமிருந்து பெறப்பட்டதாகும் என்பதாகும். செங்கோட கவுண்டரும், அவருடைய இரு மகன்களும் சேர்ந்து வாழ்ந்ததாலும் மற்றும் அவர்கள் சேர்ந்து நிலத்தின் மீது சில கடன்கள் பெற்றதனாலுமே, வழக்குச் சொத்துகள், மூதாதையர் சொத்துகளுடன் செங்கோட கவுண்டரால் சேர்க்கப்பட்டு விட்டன என கூறப்படமுடியாது என மேலும் வாதிடப்படுகிறது. பெறப்பட்ட கடன்கள் செங்கோட கவுண்டரால் வழக்குச் சொத்துகளிலிருந்து பெறப்பட்ட வருவாயைக்கொண்டே செலுத்தப்பட்டன என்பது மறுப்பாளர் தரப்பின் குறிப்பான வழக்காகும் என வாதிடப்படுகிறது.

6.7.மேல்முறையீட்டாளர்/ஆதியில் மறுப்பாளரானவர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. சித்தார்த் நாயுடு தீவிரமாக மேலும் வாதிட்டதாவது, தந்தையார் செங்கோட கவுண்டர் தன் வாழ்நாளில் வா.த.சா.ஆ .13, வா.த.சா.ஆ.14 ஆகிய தீர்வாவணங்களையும் மற்றும் 08.11.2004-ஆம் தேதியிடப்பட்ட ம.த.சா.ஆ.24 உயிலாவணத்தையும் நிறைவேற்றினார். அதுவே, அவர் வழக்குச் சொத்துகளைக் குடும்ப சொத்துகளுடன் சேர்க்கும் எண்ணம் கொண்டிருக்கவில்லை என்பதைத் தெரிவிக்கிறது என்பதாகும். அது அப்படியிருக்க, இரு கீழமை நீதிமன்றங்களும் வா.த. சா.ஆ.13, 14 ஆகிய தீர்வாவணங்கள் மற்றும் ம.த. சா.ஆ.24-ஆன உயிலாவணத்தையும் உறுதி செய்தது நியாயப்படுத்தப்படுகிறது என உயர் நீதிமன்றம் கருத்து தெரிவித்து தீர்ப்பளித்துள்ளது என வாதிடப்படுகிறது. எனினும் அதன்பின்னர், செங்கோட கவுண்டர் வழக்குச் சொத்துகளை சுய சம்பாத்திய சொத்துகளாகக் கருதி, மொத்தத்திற்கும் தீர்வாவணங்கள் மற்றும் உயிலாவணம் நிறைவேற்ற அருகதையற்றவர் என்றும், ஆனால், அவருடைய 1/3 பங்கிற்கு மட்டுமே எஞ்சிய கூட்டுக் குடும்பத்தினருக்கு, அதாவது, மகன்களுக்காதரவாக ஆவணம் நிறைவேற்ற முடியும் என்றும் தீர்ப்பளித்ததன் மூலம் உயர் நீதிமன்றமானது தவறிழைத்துவிட்டது என வாதிடப்படுகிறது.

6.8.மேற்படி வாதங்களை சமர்ப்பித்தும் மற்றும் இந்நீதிமன்றத்தின் மேற்படி தீர்ப்புகளைகச் சார்ந்தும், தற்பொழுதைய மேல்முறையீடுகளை அனுமதிக்கவும், உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவை இன்மையாக்கியும் மற்றும் நீக்கறவு செய்தும், வழக்குகளை தள்ளுபடி செய்தும் இரு கீழமை நீதிமன்றங்களும் வழங்கிய தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை உயிர்ப்பிக்கவும் வேண்டப்பட்டது.

7. ஆதியில் வழக்காளரானவர் தரப்பில் முன்னிலையாகும் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. வி. பிரபாகர் தற்பொழுதைய மேல்முறையீடுகளை ஆட்சேபிக்கையில் தீவிரமாக வாதிட்டதாவது வாதிட்டதாவது, "உயர் நீதிமன்றமானது, உ.வி.மு.ச., பிரிவு 100-இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டை முடிவு செய்கையில், தன்னுடைய வரம்பை குறித்து எச்சரிக்கையாகவே இருந்தது என்பதாகும். எனினும், இரு கீழமை நீதிமன்றங்களும், கோப்பிலுள்ள ஆவணங்கள் மற்றும் சான்றுகளை மிகக் குறிப்பாக, வா.த.சா.ஆ.1 மற்றும் வா.த.சா.ஆ.19, 24, 45 மற்றும் 46 ஆகியவற்றை முறையாக ஆயவில்லை என உயர் நீதிமன்றம் அறிந்ததால், அதன்பின்னரே, வழக்குச் சொத்துகள் செங்கோட கவுண்டரால் கூட்டுக் குடும்பச் சொத்துகளுடன் அதாவது, மூதாதையர் சொத்துகளுடன் சேர்க்கப்பட்டன என சரியாகவே தீர்ப்பளித்துள்ளது என வாதிடப்படுகிறது.

7.1.ஆதியில் வழக்காளரானவர் தரப்பில் முன்னிலையாகும் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. வி. பிரபாகரால் செங்கோட கவுண்டரால் காட்டப்பட்ட இரக்கமானது, வழக்குச் சொத்துகளை கூட்டுக் குடும்ப/மூதாதையர் சொத்துகளுடன் சேர்த்ததாகவே கொள்ள வேண்டும் என தீர்ப்பளிக்கையில் உயர் நீதிமன்றத்தினால் நம்பத்தக்க காரணங்கள் தரப்பட்டுள்ளன என வாதிடப்படுகிறது என வாதிடப்பட்டது.

7.2. 05.02.1975-ஆம் தேதியிடப்பட்ட வா.த.சா.ஆ.10 மற்றும் 25.03.1977-ஆம் தேதியிடப்பட்ட வா.த.சா.ஆ.2 ஆகிய கிரையாவணங்கள் மூலம் 07.04.1956-ஆம் தேதியிடப்பட்ட வா.த.சா.ஆ.1-ஆன தீர்வாவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துகளில் சில மூதாதையர் சொத்துகளாக

பாவிக்கப்பட்டு விற்கப்பட்டதை பரிசீலித்தப் பின்னர், 07.04.1956-ஆம் தேதியிடப்பட்ட வா.த.சா.ஆ.1-ஆன தீர்வாவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துகள் செங்கோட கவுண்டரால் கூட்டுக் குடும்ப/மூதாதையர் சொத்துகளுடன் சேர்க்கப்பட்டு விட்டது என உயர் நீதிமன்றமானது சரியாகவே தீர்ப்பளித்துள்ளது என ஆதியில் வழக்காளரானவர் தரப்பில் முன்னிலையாகும் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. வி. பிரபாகரால் மேலும் வாதிடப்படுகிறது. அதன்பின்னர் அவ்வாறு அறிந்த பின்னரே, ஒருமுறை வழக்குச் சொத்துகள் மூதாதையர் சொத்துகளுடன் செங்கோட கவுண்டரால் சேர்க்கப்பட்டுவிட்டால், வழக்குச் சொத்துகள் மொத்தத்தையும் சுய சம்பாத்திய சொத்துகளாகக் கருதி, அவற்றிற்கு தீர்வாவணமோ அல்லது உயிலாவணமோ நிறைவேற்ற செங்கோட கவுண்டருக்கு அருகதையில்லை என உயர் நீதிமன்றமானது சரியாகவே தீர்ப்பளித்துள்ளது என வாதிடப்பட்டது.

7.3. தற்பொழுது ஆதியில் வழக்காளரானவர் தரப்பில் முன்னிலையாகும் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. வி. பிரபாகரால் வைக்கப்பட்ட வாதங்களைப் பொருத்தவரையில், எதிர்ப்பிற்குள்ளான தீர்ப்பு மற்றும் உத்தரவை வழங்குகையில், கோப்பிலுள்ள அனைத்து சான்றுகளையும் உயர் நீதிமன்றம் மறு ஆய்வு செய்ததைப் பொருத்தவரையில், முதன்மையான சட்ட வினாக்களை விவாதிக்கையில்/முடிவெடுக்கையில், உயர் நீதிமன்றமானது கோப்பிலுள்ள அனைத்துச் சான்றுகளையும் பரிசீலித்து, கீழமை நீதிமன்றங்களால் பதியப்பட்ட அறிந்தவைகள் கோப்பிலுள்ள சான்றுகளுக்கு முறைகேடாகவோ அல்லது முரணாகவோ உள்ளனவா என்னும் முடிவிற்கு வர அந்நீதிமன்றம் (உயர் நீதிமன்றம்) கட்டுப்பட்டுள்ளது என்பதாகும். உயர் நீதிமன்றமானது, உ.வி.மு.ச., பிரிவு 100-இன் கீழ் தன்னுடைய அதிகாரங்களைப் பயன்படுத்தி இரண்டாம் மேல்முறையீட்டை முடிவு செய்கையில் சான்றுகளை ஆய்வது அனுமதிக்கத்தக்கதே என வாதிடப்படுகிறது.

7.4.மேற்படி வாதங்களை வைத்து தற்பொழுதைய மேல்முறையீடுகளை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டது.

8. இரு தரப்பினர்களுக்காகவும் முன்னிலையாகும் கற்றறிந்த வழக்குரைஞர்களின் நீண்ட வாதங்களைக் கேட்டோம்.

8.1.எடுத்த எடுப்பில் விசாரணை நீதிமன்றமும் மற்றும் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றமும், வழக்குகளை தள்ளுபடி செய்திருக்கையில், மிகக் குறிப்பாக வழக்குச் சொத்துகள் மூதாதையர் சொத்துகளல்ல. அவை செங்கோட கவுண்டரின் சுய சம்பாத்திய சொத்துகள் என சான்றுகளை ஆராய்ந்து முடிவெடுத்து, வழக்காளரால் தாக்கல் செய்யப்பட்ட பாகப்பிரிவினை வழக்கைத் தள்ளுபடி செய்திருக்கையில், உயர் நீதிமன்றமானது, உ.வி.மு.ச., பிரிவு 100-இன் கீழான தன்னுடைய அதிகாரங்களைப் பயன்படுத்தி இரண்டாம் மேல்முறையீட்டை தீர்மானிக்கையில், இரு கீழமை நீதிமன்றங்களினாலும் பதியப்பட்ட அறிந்தமைகள் எதிர்மறையாக்கப்பட்டு, அவை நீக்கறவு செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். அறிவார்ந்த விசாரணை நீதிமன்றத்தினாலும் மற்றும் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தினாலும் பதியப்பட்ட அறிந்தமைகளை நாங்கள் படித்து பரிசீலித்துள்ளோம். கோப்பிலுள்ள அனைத்து சான்றுகளையும் ஆராய்ந்து, மிகக் குறிப்பாக உயர் நீதிமன்றத்தினால் பரிசீலிக்கப்பட்ட ஆவணச்சான்றுகளான வா.த.சா.ஆ.1 மற்றும் வா.த.சா.ஆ.19, 24, 45 மற்றும் 46 ஆகிய ஆவணச் சான்றுகளை ஆராய்ந்த பின்னர், வழக்குச் சொத்துகள் கூட்டுக் குடும்பச் சொத்துகளுடன் சேர்க்கப்படவோ அல்லது கூட்டுக் குடும்பச் சொத்துகளாக பாவிக்கப்படவோ இல்லை என கீழமை நீதிமன்றங்களும் முடிவிற்கு வந்தன. மேற்கூறியவாறிருந்தபொழுதிலும், உயர் நீதிமன்றமானது, எதிர்ப்பிற்குள்ளான தீர்ப்பு மற்றும் உத்தரவை வழங்குகையில், ஏற்கெனவே இரு கீழமை நீதிமன்றங்களினாலும் பரிசீலிக்கப்பட்ட ஆவணச்சான்றுகளை மறு ஆய்வு செய்து, இரு கீழமை நீதிமன்றங்களினாலும் பதியப்பட்ட பொருண்மைகளின் அறிந்தமைகளை எதிர்மறையாக்கி, வழக்குச் சொத்துகள், கூட்டுக் குடும்பச் சொத்துகளுடன் சேர்க்கப்பட்ட சொத்துகளாகும் என தன்னுடைய சொந்த முடிவை அளித்துள்ளது. உ.வி.மு.ச., பிரிவு 100-இன் கீழான தன்னுடைய அதிகாரங்களை அவ்வாறு பயன்படுத்துவது முற்றிலும் அனுமதிக்கத்தக்கதல்ல. இந்நீதிமன்றத்தின் தொடர் தீர்ப்புகளின்படி,

உ.வி.மு.ச.பிரிவு 100-இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டை தீர்மானிக்கையில், உயர் நீதிமன்றமானது, கோப்பிலுள்ள அனைத்து சான்றுகளையும் மறு ஆய்வு செய்து, தன்னுடைய சொந்த முடிவிற்கு வரத்தேவையில்லை மற்றும் இரு கீழமை நீதிமன்றங்களினாலும் பதியப்பட்ட அறிந்தமைகள், கோப்பிலுள்ள ஆவணங்களை ஆராய்ந்து, அதன் அடிப்படையில் அறிந்தமைகள் பதியப்படும்பொழுது, உயர் நீதிமன்றம் அவற்றை நீக்கறவு செய்யமுடியாது. உயர் நீதிமன்றமானது, இரண்டாம் மேல்முறையீட்டைத் தீர்மானிக்கையில் தற்பொழுதைய வழக்கில், அதைத்தான் அப்படியே செய்திருக்கிறது. அது, சட்டப்படி அனுமதிக்கத்தக்கதல்ல.

8.2. மற்றபடியும், இந்நீதிமன்றத்தின் தொடர் தீர்ப்புகளின்படியும் மற்றும் உ.வி.மு.ச., பிரிவு 100-இல் வகுக்கப்பட்டுள்ளபடியும், இரண்டாம் மேல்முறையீடானது முதன்மை சட்ட வினாவின் அடிப்படையிலேயே நிலைக்கத்தக்கது என்பதை குறிப்பிடவேண்டியுள்ளது. இரண்டாம் மேல்முறையீடானது பொருண்மை வினாவின் அடிப்படையிலேயோ அல்லது சட்ட வினாவின் அடிப்படையிலேயோ அமையவில்லை. உ.வி.மு.ச., பிரிவு 100-இன் கீழ் அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு முதன்மையான சட்ட வினா இன்றியமையா தகுதிக்கூறாகும். (மேற்கண்ட) கோந்திபா தகடு கடம் என்னும் வழக்கில் இந்நீதிமன்றம் கருத்து தெரிவித்து தீர்ப்பளித்ததுபோன்று, உ.வி.மு.ச., பிரிவு 100-இன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டில் கீழமை நீதிமன்றங்களால் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் பின்வரும் வகையில் தவறானவையாக இருந்தாலன்றி, உயர் நீதிமன்றமானது முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் முடிவிற்கு தன்னுடைய முடிவை மாற்றாக வைக்கமுடியாது:

(i) பொருந்தக்கூடிய சட்டத்தின் கண்டிப்பான விதிகளுக்கு முரணாக இருந்தால்; அல்லது

(ii) மேல்நீதிமன்றங்களினால் கூறப்பட்ட சட்டத்திற்கு முரணாக இருந்தால்; அல்லது

(iii) அனுமதிக்கத்தகாத சான்றின் அடிப்படையிலேயோ அல்லது சான்றின்றியோ இருந்தால்.

முதல் மேல்முறையீட்டு நீதிமன்றமானது, சட்டப்படி தன்னுடைய விருப்பச்சார்பை பயன்படுத்தியிருக்குமானால், அதன் முடிவானது, சட்டப்படியோ அல்லது நடைமுறையின்படியோ பிழையால் பாதிப்படைவதாக இரண்டாம் மேல்முறையீட்டில் கருதப்படவோ அல்லது குறுக்கிடப்படவோ முடியாது என மேற்படி வழக்கில் மேலும் இந்நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது. விசாரணை நீதிமன்றமானது, வேறுபட்டு தீர்மானித்திருப்பது, இரண்டாம் மேல்முறையீட்டில் குறுக்கிடுவதற்கு சட்ட வினாவாக நியாயப்படுத்தப்படமுடியாது என்றும் மேலும் இந்நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.

8.3.எப்பொழுது முதன்மையான சட்ட வினா எழுந்துள்ளது என்பது குறித்து, (மேற்படி) ஈஸ்வர்தாஸ் ஜெயின் என்னும் வழக்கில் இந்நீதிமன்றத்தினால் பரிசீலிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் இந்நீதிமன்றமானது குறிப்பாக பின்வருமாறு கருத்து தெரிவித்து தீர்ப்பளித்துள்ளது:

"உ.வி.மு.ச., பிரிவு 100-இன் கீழ் 1976-ஆம் ஆண்டைய திருத்தத்திற்குப் பின்னர் உயர் நீதிமன்றமானது முதன்மை சட்ட வினாக்களை வனையவேண்டும். அவ்வாறு செய்யாமல் அந்நீதிமன்றமானது, முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்மறையாக்குவது, அனுமதிக்கத்தக்கதல்ல. பொருண்மைகளின் முடிவுகளில் குறுக்கிடுவது, இரு சூழ்நிலைகளில் மட்டுமே அனுமதிக்கத்தக்கதாகும். முதலாவதாக, தெளிவான ஆவணச்சான்றுகள் இருந்தும் அவை பரிசீலிக்கப்படாமை, அவை பரிசீலிக்கப்பட்டிருந்தால் எதிரான முடிவிற்கு வழிகோலியிருக்கும் என்கின்றபொழுது, பொருண்மையின் முடிவில் உயர் நீதிமன்றத்தின் குறுக்கீடானது அனுமதிக்கப்படும் இரண்டாம் சூழ்நிலையானது, அனுமதிக்கமுடியாத சான்றை சார்ந்து நின்று, மேல்முறையீட்டு நீதிமன்றமானது முடிவிற்கு வந்துள்ளபொழுது அல்லது எதிரான முடிவு சாத்தியம் என்கின்றபொழுது மேற்படி

சூழ்நிலைகளுள் ஏதேனும் ஒன்றில், முதன்மையான சட்ட வினா எழமுடியும். "

8.4.மேற்படி வழக்கில் இந்நீதிமன்றத்தினால் வகுக்கப்பட்ட சட்டத்தைப் பொருத்தி, உயர் நீதிமன்றத்தினால் வனையப்பட்ட முதன்மை சட்ட வினாக்கள் மீண்டும் கீழே எடுத்து தரப்படுகின்றன. மேற்படி சட்ட வினாக்களை முதன்மை சட்ட வினாக்களாக கூறமுடியாது. அனைத்துமே சட்ட வினாக்களாக அல்லது பொருண்மை வினாக்களாக கூறப்படமுடியும். ஆனால், முதன்மை சட்ட வினாக்களாக கூறப்படமுடியாது.

8.5.மேலே கருத்து தெரிவிக்கப்பட்டவாறு, உயர் நீதிமன்றமானது, எதிர்ப்பிற்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவை பிறப்பிக்கையில், வழக்கை முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் முடிவு செய்வதுபோன்று, கோப்பிலுள்ள அனைத்து சான்றுகளையும் மறு ஆய்வு செய்துள்ளது. உயர் நீதிமன்றமானது உ.வி.மு.ச., பிரிவு 100-இன் கீழ் அதிகாரங்களைப் பயன்படுத்துகையில், கோப்பிலுள்ள அனைத்து சான்றுகளையும் மறு ஆய்வு செய்து எதிர்ப்பிற்குள்ளான தீர்ப்பு மற்றும் உத்தரவின் மூலம் வழக்குச் சொத்துகளை கூட்டுக் குடும்பச் சொத்துகளுடன் சேர்த்தல் குறித்து இரு கீழமை நீதிமன்றங்களாலும் பதியப்பட்ட அறிந்தமைகளை நீக்கறவு செய்துள்ளது. அது, முற்றிலும் அனுமதிக்கத்தக்கதல்ல. பொருண்மைகளைப் பொருத்தவரையில், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றமே இறுதி நீதிமன்றமாகும். இரு கீழமை நீதிமன்றங்களாலும் பதியப்பட்ட அறிந்தமைகள் கோப்பிலுள்ள சான்றுகளுக்கு முறைகேடாகவோ அல்லது முரணாகவோ வெளிப்படையாக தோன்றினாலன்றி, கோப்பிலுள்ள சான்றுகளை ஆராய்ந்து கீழமை நீதிமன்றங்களினால் பதியப்பட்ட அறிந்தமைகளை நீக்கறவு செய்வதில் உயர் நீதிமன்றமானது நியாயப்படுத்தப்படமுடியாது. கீழமை நீதிமன்றங்களினால் குறிப்பாக, முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தினால் பதியப்பட்ட அறிந்தமையானது கோப்பிலுள்ள அனைத்து சான்றுகளையும் ஆராய்ந்து பதியப்பட்டிருக்கும்பொழுது, உயர் நீதிமன்றமானது, கோப்பிலுள்ள அனைத்து சான்றுகளையும் மறு ஆய்வு செய்து, தன்னுடைய சொந்த முடிவிற்கு வருவது அனுமதிக்கப்படமுடியாது. எனவே, இரண்டாம்

மேல்முறையீட்டை தீர்மானிக்கையில் உயர் நீதிமன்றத்தினால் பின்பற்றப்பட்ட நடைமுறையானது, உ.வி.மு.ச., பிரிவு 100-இன் கீழ் தன்னுடைய அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கான வரம்பை மீறியதாகும்.

9. மற்றபடியும் தகுதிகளின் அடிப்படையிலுங்கூட, வழக்குச் சொத்துகள், கூட்டுக் குடும்பச் சொத்துகளுடன் செங்கோட கவுண்டரால் சேர்க்கப்பட்டுவிட்டன என தீர்ப்பளித்ததன் மூலம் உயர் நீதிமன்றம் பிழை செய்துவிட்டது. உயர் நீதிமன்றத்தினால் கருத்து தெரிவித்து தீர்ப்பளிக்கப்பட்டது போன்றுங்கூட, வா.த.சா.ஆ.1-ஆன 07.04.1956-ஆம் தேதியிடப்பட்ட தீர்வாவணத்தின் மூலம் செங்கோட கவுண்டருக்கு கிடைத்த வழக்குச் சொத்தானது, சுய சம்பாத்திய சொத்துகளாகும் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட நிலைப்பாடாகும். காரணம், அவை நேரடியான ஆண் மூதாதையரிடமிருந்து பெறப்படவில்லை. அவருடைய தாயாரின் சகோதரியின் கணவரிடமிருந்து பெறப்பட்டதாகும். வா.த.சா.ஆ .1-ஆன 07.04.1956-ஆம் தேதியிடப்பட்ட தீர்வாவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில வழக்குச் சொத்துகள் விற்கப்பட்டபொழுது, அவை கூட்டுக் குடும்ப/மூதாதையர் சொத்துகள் என்றும், குடும்ப செலவினங்களின் அவசர தேவை நிமித்தமாக அவை விற்கப்படுகின்றன என்றும், கிரைய ஆவணச் சொத்து விவரங்களில் கூறப்பட்டுள்ளது. எனினும், செங்கோட கவுண்டரால் தன்னுடைய மகன் சுப்ரமணி/அசல் மறுப்பாளருக்கு சொத்துகளையளித்து தாமாகவே நிறைவேற்றப்பட்ட ஆவணங்களான, வா.த.சா.ஆ.13, 14 மற்றும் ம.த.சா.ஆ.24 (உயில்) ஆகிய ஆவணச் சான்றுகளை பரிசீலித்ததில், மேற்படி சொத்துகள், கூட்டுக் குடும்பச் சொத்துகளாக பாவிக்கப்படவில்லை. சுய சம்பாத்திய சொத்துகளாகவே பாவிக்கப்பட்டன என்னும் செங்கோட கவுண்டரின் எண்ணம் தெளிவாகிறது.

9.1.கூட்டுக் குடும்ப உறுப்பினர்களான செங்கோட கவுண்டர், இராமசாமி மற்றும் சுப்ரமணியன் ஆகிய மூவராலும், கூட்டாக வழக்குச் சொத்துகள் மீது ஆழ்துளை கிணறுக்காகவும், பயிர் கடன், மின்சார மோட்டார் கடன், நகை கடன் போன்றவை பெறப்பட்டுள்ளதால், வழக்குச் சொத்துகள், கூட்டுக் குடும்பச் சொத்துகளுடன் சேர்க்கப்பட்டுவிட்டன என உயர்

நீதிமன்றத்தினால் காரணங்கள் கூறப்பட்டாலும், அவை ஏற்கப்படமுடியாது. மூவரும் சேர்ந்து வசித்து, குடும்ப உறுப்பினர்களால் கூட்டாக சில கடன்கள் பெறப்பட்டிருந்தாலும், அதனாலேயே, வழக்குச் சொத்துகள், கூட்டுக் குடும்ப சொத்துகளுடன் சேர்க்கப்பட்டுவிட்டன என கூறப்படமுடியாது. தனிப்பட்ட அல்லது சுய சம்பாத்திய சொத்துகளை கூட்டுக் குடும்பச் சொத்துகளுடன் சேர்த்தல் குறித்து, சட்டமானது நன்கு வரையறுக்கப்பட்டுள்ளது. அது, யாதெனில், இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினரின் தனிப்பட்ட அல்லது சுய சம்பாத்திய சொத்துகள், அதன் உரிமையாளரால், அதில் தனக்குள்ள உரிமைகளை விட்டுக்கொடுக்கும் எண்ணத்துடன், அவை கூட்டுக் குடும்பச் சொத்துகளுடன் தாமாகவே சேர்க்கப்படுமானால், அவை கூட்டுக் குடும்பச் சொத்துகளின் பண்பைப் பெறுகின்றன என்பதாகும். ஆனால், அத்தகைய உரிமை விட்டுக்கொடுத்தலை நிறுவ தன்னுடைய உரிமையை விட்டுக்கொடுப்பதற்கான எண்ணமானது, தெளிவாக நிறுவப்படவேண்டும். சொத்திலுள்ள தனிப்பட்ட உரிமைகளை விட்டுக்கொடுப்பதற்கான தெளிவான நோக்கமானது நிரூபிக்கப்பட வேண்டும். விட்டுக்கொடுத்தலானது, குடும்ப உறுப்பினர்களை ஆதரிக்கும் பெருந்தன்மையில் தனிப்பட்ட சொத்துகளை பயன்படுத்திக்கொள்ளவோ அல்லது அதன் வருவாயை அனுபவிக்கவோ, பிற உறுப்பினர்களை அனுமதிப்பதிலிருந்து அனுமானிக்கப்பட்டிராது. இக்கட்டத்தில், கடனை யார் திரும்ப செலுத்தியது என்பது குறித்து கடும் தகராறுள்ளது என்பதை குறிப்பிடவேண்டியுள்ளது. தான்தான் கடனை செலுத்தியதாக வழக்காளர் கூறினார். எனினும், வழக்குச் சொத்துகளிலிருந்து பெறப்பட்ட வருவாயைக் கொண்டே கடனானது செங்கோட கவுண்டரால் செலுத்தப் பட்டது என மறுப்பாளர் சுப்ரமணியன் வாதிட்டார். பின்னர், உயர் நீதிமன்றத்தினால் மீண்டும் ஆய்வு செய்யப்பட்ட ஆவணச் சான்றுகள் உட்பட, கோப்பிலுள்ள சான்றுகளின் ஆய்வின்பொழுது வழக்குச் சொத்துகள் கூட்டுக் குடும்பச் சொத்துகளுடன் சேர்க்கப்படவில்லை என இரு கீழமை நீதிமன்றங்களும் முடிவிற்கு வந்தன. கோப்பிலுள்ள சான்றுகளை ஆராய்ந்து, இரு கீழமை நீதிமன்றங்களும் பதிந்த அறிந்தமைகளை உயர் நீதிமன்றமானது, உ.வி.மு.ச., பிரிவு 100-இன் கீழான தன்னுடைய அதிகாரங்களைப் பயன்படுத்தி, எதிர்மறையாக்குவது நியாயப்படுத்தப்பட முடியாது.

10. மேற்படி கருத்தின் அடிப்படையிலும் மற்றும் மேற்கூறப்பட்ட காரணங்களின் அடிப்படையிலும் தற்பொழுதைய இரு மேல்முறையீடுகளும் அனுமதிக்கப்படுகின்றன. இ.மே. எண்கள் 4-5/2009 ஆகியவற்றில் உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட பொதுவான தீர்ப்பு மற்றும் உத்தரவு ஆகியவை இன்மையாக்கப்பட்டு, அவை நீக்கறவு செய்யப்பட்டு, வழக்குகளைத் தள்ளுபடி செய்து, விசாரணை நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட பொதுவான தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ஆகியவை உயிர்ப்பிக்கப்படுகின்றன. எனினும், வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளில் செலவுத்தொகைகள் குறித்து உத்தரவேதுமில்லை.

**மாண்புமிகு நீதியரசர் திரு. எல். நாகேஸ்வர ராவ்**

**மாண்புமிகு நீதியரசர் திரு. எம்.ஆர். ஷா**

**புது டெல்லி,**

**01.05.2019.**

.....

**<u>உரிமைத்துறப்பு</u>**

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும். "